# மாநில அளவிலான பொறியியல் வடிவமைப்புப் போட்டி

தாம்பரம்,டிச 13: மேற்கு தாம்பரம் சாய்ராம் பொறியியல் கல்லூரியில் ஐசிடி அகாதெமியும், சர்வதேச அளவில் வடிவமைப்புத் தொழில்நுட்பத்தில் சிறந்து விளங்கும் ஆட்டோ டெஸ்க் நிறுவனமும் இணைந்து மாநில அளவிலான பொறியியல் வடிவமைப்பு போட்டியை நடத்தின.

போட்டியில் தமிழ்நாடு, பாண்டிச்சேரி மாநிலங்களைச் சேர்ந்த 1000 பொறியியல் கல்லூரி மாணவர்கள் பொறியியல் வடிவமைப்பு போட்டியில்பங்கேற்றனர். சுற்றுச்சூழல், போக்குவரத்து வசதி, மருத்துவம், சுகாதாரம் ஆகியவற்றை மேம்படுத்தும் நவீன தொழில்நுட்பக் கண்டுபிடிப்பு மாதிரிகள் வடிவமைக்கும் போட்டியில் சென்னை பிரதியூஷா கல்லூரி மாணவர்கள் பி.முரளி பிரசாத், எம்.ஆகாஷ் வடிவமைத்த மாதிரி முதல் பரிசையும், கோவை பன்னாரி அம்மன் பொறியியல் கல்லூரி மாணவர்கள் விஷ்ணுசங்கர், பிரதேஷ் வடிவமைத்த மாதிரி 2-வது பரிசையும், சாய்ராம் இன்ஸ்டியூட் ஆப் டெக்னாலஜி மாணவர்கள் எஸ்.சரண்யன், எஸ்.சத்தியநாராயணன், கே.பி.சிவசுப்ரமணியன் வடிவமைத்த மாதிரி 3-ஆவது பரிசையும் பெற்றன.

மாணவர்களுக்கு முதல் பரிசாக ரூ.30 ஆயிரமும், 2-ஆவது பரிசாக ரூ. 20 ஆயிரமும், 3-ஆவது பரிசாக ரூ10 ஆயிரமும் வழங்கப்பட்டது.

முன்னதாக ஐசிடி அகாடமி தலைமை செயல் அதிகாரி எம்.சிவகுமார் பேசியபோது, பொறியியல் கல்லூரியில் படித்துக் கொண்டு இருக்கும்போதே தங்களது பொறியியல் வடிவமைப்புத் திறனையும், துறைச் சார்ந்த அறிவாற்றலையும் மேம்படுத்திக் கொள்ள அளிக்கப்பட்ட வாய்ப்பை சிறப்பாகப் பயன்படுத்திக் கொண்ட மாணவர்கள் பாராட்டுக்குரியவர்கள் என்றார்.

ஆட்டோ டெஸ்க் நிறுவன இந்தியத் தலைவர் ஆனந்த் பிள்ளை, மாணவர்களின் திறனை மேம்படுத்தும் நடவடிக்கைக்கு ஆட்டோ டெஸ்க் உறுதுணையாகத் திகழும் என்றார்.

சாய்ராம் பொறியியல் கல்லூரி தலைமை செயல் அதிகாரி சாய்பிரகாஷ்லியோமுத்து, மாணவர்களின் பொறியியல் வடிவமைப்பு, படைப்பாற்றல் திறனை மேம்படுத்த உறுதுணை புரிந்துள்ள ஆட்டோ டெஸ்க் நிறுவனம், மாணவர்களின் திறமையை சர்வதேச அளவில் பயன்படுத்திக் கொள்ள முன் வர வேண்டும் என்றார்.

கல்லூரி முதல்வர்கள் சி.வி.ஜெயக்குமார், பழனிக்குமார், ஆய்வுத் துறைத் தலைவர் ராஜேந்திர பிரசாத், இயக்குநர் கே.மாறன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.




சாய்ராம் பொறியியல் கல்லூரியில் நடைபெற்ற வடிவமைப்பு போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுடன் ஆட்டோ டெஸ்க் நிறுவன சர்வதேசத் தலைவர் கிரே கான்ராட், இந்திய தலைவர் ஆனந்த் பிள்ளை, ஐ.சி.டி. அகாதெமி தலைவர் லட்சுமி நாராயணன், தலைமை செயல் அலுவலர் எம்.சிவகுமார், சாய்ராம் பொறியியல் கல்லூரி தலைமை செயல் அதிகாரி சாய்பிரகாஷ் லியோமுத்து, தமிழ்நாடு கைவினைப் பொருட்கள் வளர்ச்சிக் கழகத் தலைவர் சந்தோஷ்பாபு உள்ளிட்டோர்.